## செய்தி குறிப்பு

புதுவை பொறியியல் கல்லூரி கணினி அறிவியியல் துறையில் பேராசிரியராக பணிபுரிபவர் முனைவர் தம்பிதுரை. தற்போது காரைக்கால் பெருந்தலைவர் காமராஜர் பொறியியல் மற்றும் தொழில் நுட்பநிறுவனத்தில் கல்லூரி முதல்வராக பிரதிநிதித்துவ முறையில் பணியாற்றி வருகிறார். இக்கல்லூரி தொடங்கிய 2007–ஆம் ஆண்டுமுதல் கடந்த பத்துக்கும் மேலான ஆண்டுகளாக கல்லூரியின் முதல்வராப் பணியாற்றி வருகிறார். இந்திய கணினி மேலாண்மை கழகத்தின் சார்பில் மும்பை கிளை சிறந்த கல்லூரி முதல்வர்களை தெரிவு செய்ய விண்ணப்பங்கள் வரவேற்றது. இதில் 300–க்கும் மேற்பட்டோர் விண்ணப்பித்திருந்தனர்.

அகில இந்திய தொழிற்நுட்ப கழகத்தின் முன்னாள் தலைவர் பேராசிரியர் S.S. மந்தா உள்ளிட்ட நான்கு பேர் கொண்ட நடுவர்கள் மூலம் தெரிவு செய்யப்பட்டு பேராசிரியர் தம்பிதுரைக்கு "சிறந்த கல்லூரி முதல்வர்" என்ற விருது வழங்கப்பட்டது. இவ்வாறு திரு தம்பிதுரை தெரிவு செய்யபட்டிருப்பது நமது புதுவை பொறியியல் கல்லூரிக்கு பெருமை சேர்ப்பதாகும் என்பதில் ஐயமில்லை.

மாணவர்களின் நலனில் அக்கரையோடு புதியமுயற்சிகள் மேற்கொண்டு தங்களது செயல்திறனை மேம்படுத்திப் பாதுகாப்பான முறையில் பயிற்றுவித்து அவர்களை வளாக நேர்கானல் மூலம் பன்னாட்டு தொழில்நுட்ப நிறுவனங்களில் வேலையில் சேர்வதற்கான சூழலை மிகுந்த பண்போடும், அர்பணிப்போடும், நேர்மையோடும், கடின உழைப்போடும் உருவாக்கி மாணவர்களை மிளிரச்செய்துள்ளார் என்பதற்காக அவருக்கு சிறந்த கல்லூரி முதல்வருக்கான விருது வழங்கபட்பட்டுள்ளது.

14/02/2018

முதல்வர்
PRINCIPAL
Perunthalaivar Kamarajar
Institute of Engineering and Technology (PKIE
(Government of Puducherry Institution)
Nedungadu, Karaikal - 609 603